//தேர்வுகள்// //அவசரம்// //தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4379/ஆ4/2025 நாள்.01.12.2025

பொருள் தேர்வுகள் –வேலூர் மாவட்டம்– மார்ச்–2026 மேல்நிலை இரண்டாமாண்டு / மேல்நிலை முதலாமாண்டு (ARREAR) பொதுத் தேர்வு மாற்றுத்திறனாளி பள்ளி மாணாக்கர்கள் – தேர்வு நேரத்தில் சலுகைகள் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்றல் குறித்து.

பார்வை 1. அரசாணை (நிலை) எண்.62 பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை. .25.03.2022
2.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 016029/எச்1/2025 நாள் 06.11.2025
==============

பார்வை 2–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு. மார்ச் 2026 மேல்நிலை இரண்டாமாண்டு/ மேல்நிலை முதலாமாண்டு (ARREAR) பொதுத் தேர்வு எழுதவுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குத் தேர்வெழுத சலுகை வழங்குதல் தொடர்பான கீழ்க்காணும் அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான அறிவுரைகள்:

1. பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணையில், அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் மேல்நிலை பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுள், மாற்றுத் திறனாளித் தேர்வர்களின் நலன் கருதி, பிற மாணவர்களுக்கு சமமாக அவர்களும் எவ்வித குறைகளுமின்றி தேர்வெழுதி மதிப்பெண்கள் ஈட்டுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு குறிப்பிட்ட சலுகைகளை தேர்வு நேரங்களில் வழங்க அரசு அனுமதித்துள்ளது. (அரசாணைகளை இத்துடன் இணைக்கப்படுள்ளது)

2. மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி, பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு உடல் குறைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும் சலுகைகள் குறித்து தங்கள் பள்ளியில் பயிலும் மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்களுக்கு பள்ளி தலைமையாசிரியர் எடுத்துரைக்க வேண்டும்.

3. அரசாணைகளின்படி உடல் குறைபாட்டின் அடிப்படையில் தேர்வெழுத சலுகைகள் கோரும் மாணவரிடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை (படிவம்–1 ) வழங்கி, மாணவரிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் மாற்றுத் திறனாளிக்கான தேசிய அளவில் வழங்கப்படும் அடையாள அட்டையின் நகல் அல்லது மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையம் வழங்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள

அட்டையின் நகலினை பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக்கொண்டால் போதுமானது மருத்துவக் குழுவின் சான்றிதழ் பெற வேண்டிய அவசியமில்லை.

4. மேற்கண்டவாறு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள் இல்லாத மருத்துவக் மாணாக்கர்களிடமிருந்து மட்டும் அரசு சார்ந்த குழுவின் (Government medical board) பரிந்துரைக் கடிதத்தினை பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொள்ளவேண்டும். மருத்துவசான்றிதழில் நோயின் தன்மை மற்றும் மாணவருக்கு வழங்க வேண்டிய சலுகை பற்றிய விவரம் ஆகியவை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும். மேலும், மருத்துவச்சான்றுகள் உரிய காலவரையறைக்குள் இருக்க வேண்டும்.

5. மேற்குறிப்பிட்டவாறு, மாற்றுத் திறனாளி தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பபடிவங்கள் மற்றும் மருத்துவச் சான்றுகளை, பள்ளித் தலைமையாசிரியர்கள் 04.12.2025 தேதிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் ஒப்படைக்க வேண்டும்.

இணைப்பு :

1. படிவம்
2. அரசாணை
3. சலுகை விவரம்

//ஒம்.//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

அனைத்து வகை உயர்/மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் வே.மா.

நகல் :

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் ) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.